JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw- 1- Witness
for Prosecution

STC.No. 305/2024 Crime No. - Station -

| Name | PW. 1 ஜெயராமன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 16.06.2026 | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பணத்தை யாரிடமிருந்து தயார் செய்து எதிரிக்கு கொடுத்தேன் என்றால், நான் பணம் யாரிடமும் வாங்கவில்லை. நான் இரண்டு சக்கர வாகனம் வாங்கும், விற்கும் கன்சல்டிங் தொழில் செய்து வருகிறேன். அதில் வந்த வருமானம் மூலம் கொடுத்தேன். மேலும் எனக்கு தோட்டத்தில் இருந்தும் வருமானம் வருகிறது. எனது பெயரில் தோட்டம் உள்ளது என்பது குறித்து நான் எந்த ஒரு ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என்னிடம் இரண்டு தொலைபேசி எண்கள் உள்ளது 9842793957 மற்றும் 9442893957 ஆகும். என்னிடம் காட்டப்படும் தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனத்தால் கொடுக்கப்படும் இரசீதில் எனது தொலைபேசி எண் உள்ளது என்றால், சரிதான். மேற்படி தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட **ரசீது எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனம் மூடப்பட்டது என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் 07.02.2026 ம் தேதி என்று குறிப்பிட்டு தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொதுவாக ஒரு நபர் ஒருவருக்கு கடன் கொடுப்பதாக இருந்தால் அந்த கடனுக்கு ஆதரவாக காசோலை கடனுறுதிச்சீட்டு மற்றும் பத்திரங்கள் வாங்குவது வழக்கம் என்றாலும், மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் Pancard வைத்துள்ளேன் என்றால், சரிதான். நான் எனது Pancard 1992 முதல் பயன்படுத்தி வருகிறேன். நான் தமிழன் ஆட்டோ ஏஜென்சிஸ் நிறுவனத்தை எந்த வருடம் மூடப்பட்டது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.16 17:26:58 +0530

என்பது குறித்து எந்த ஒரு ஆவணமும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள 2026 ஆம் ஆண்டு இரண்டு சக்கர வாகனம் என்னால் வியாபாரம் செய்யப்பட்டது என்றால், சரிதான். இரண்டு சக்கர வாகனம் யார் கேட்டாலும் வாங்கித் தருவது வழக்கம். Pancard என்ன காரணத்திற்காக பயன்படுத்தி வருகிறார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால், வருமான வரி கட்டுவதற்காக பயன்படுத்தி வருகிறார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியும்.

நான் நடத்தி வந்த தமிழன் ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்திற்கு எந்த ஆண்டு வரை வருமான வரி செலுத்தி வந்தேன் என்றால், 2005 ஆம் ஆண்டு வரை செலுத்திவந்தேன். நான் 2005 ஆம் ஆண்டுடன் தமிழன் ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்திற்கு வருமான வரி கட்டுவதை நிறுத்திவிட்டேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால், தாக்கல் செய்ய முடியாது. நான் புகாரில் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் தான் உண்மையான ஆவணங்களை நான் இந்த நீதிமன்றத்தில் மறைக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி என்னிடம் தவணை முறையில் இரண்டு சக்கரம் வாகனம் வாங்கினார் என்றாலும், அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார்  என்றால், சரியல்ல.

எதிரி இரு சக்கர வாகனம் வாங்குவதற்காக நான் ஒரு முகவராக இருந்து எதிரியிடமிருந்து கமிஷன் வாங்குவதற்காக வாங்கப்பட்ட காசோலையை நான் மோசடியாக நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் என்னிடம் பணம் இல்லை என்றாலும், எதிரிக்கு கொடுக்கும் அளவிற்கு என்னிடம் பண வசதி இல்லை என்றால், சரியல்ல. எதிரி வழக்கு காசோலையில் பூர்த்தி செய்து கொடுத்தார் என்பதை நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையெழுத்து ஒரு மையினாலும், காசோலையில் உள்ள விபரங்கள் வேறு ஒரு மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

நான் சொல்வது தவறு என்றாலும், காசோலையில் உள்ள கையெழுத்து ஒரு மையினாலும், அதில் நிரப்பப்பட்ட விவரங்கள் வேறொரு மையினாலும் உள்ளது என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணை சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி என்னிடம் எந்தவித பணமும் கேட்கவில்லை என்றாலும், நான் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி அதற்கு காசோலை கொடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கு காசோலைக்கு எவ்வித மறு பயனும் இல்லை என்றால், சரியல்ல. நான் எதிரியிடம் எவ்வளவு வட்டி வாங்கியுள்ளேன் என்றால், நான் பணத்தை எதிரிக்கு வட்டிக்கு கொடுக்கவில்லை. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து தற்போது வரை எதிரியிடமிருந்து எவ்வித வட்டியும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.16 17:27:03 +0530

வாங்கியது இல்லை என்றால், சரிதான். எதிரி எனது உறவினர் என்றால், சரியல்ல. எனக்கு தெரிந்த நபர் ஆவார். இந்த வழக்கு காசோலைக்கு முன்பு எதிரிக்கும், எனக்கும் பண பரிவர்த்தனை இருந்ததாக நான் எனது புகார், சட்ட அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். எனக்கும், எதுக்கும் இதற்கு முன்பு வரவு செலவு இருந்தது. இந்த வழக்கு காசோலைக்கு மறுபயன் எதுவும் கிடையாது என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.16 17:27:08 +0530

Sd/– (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**